

சபரகமுவ மாகாண ஆரம்பக்கல்விப் பிரிவு

சிசு சவிய 2024

தரம் - 5



மாணவர்களை பாடசாலைகளுக்கு தேர்ந்தெடுப்பதற்காகவும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சைக்காக மாணவர்களைத் தயார்படுத்தவதற்காக நடாத்தப்படும் முன்னோடிப் பரீட்சை

மதிப்பீட்டுப் பரீட்சை இலக்கம் - 2

வினாத்தாள் - 1

01 மணித்தியாலம்

இந்த வினாத்தாள் பரீட்சையல்ல என்பதோடு மாணவர்களின் அடைவு மட்டத்தினை அளவிடுவதற்காக மாத்திரம்

சுட்டெண் : - .....

பரீட்சார்த்திகளுக்கான ஆலோசனைகள்

- பரீட்சை சுட்டெண்ணை குறித்த இடத்தில் எழுதவும்.
- மூன்றாவது பக்கத்திலும் குறித்த இடத்தில் பரீட்சை சுட்டெண்ணை எழுதவும்.
- வினாத்தாளில் 40 வினாக்கள் இருக்கின்றன. எல்லா வினாக்களுக்கும் வினாத்தாளிலேயே விடையளிக்கவும்
- ஒவ்வொரு வினாவுக்கும் 3 விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களின் பாவனைக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்றப் புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தப் புள்ளி இலக்கத்தில்	
மொத்தப் புள்ளி எழுத்தில்	

	கையெழுத்து, குறியீட்டு இலக்கம்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/II/S
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்தகின்றேன்.	
	V/II/S
மதிப்பீட்டுப் புள்ளியை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு செய்து வழங்கிய புள்ளிகள், இறுதிப்புள்ளிகள் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/II/S/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்யப்பட்டது. இறுதிப்புள்ளி சரியானது.	
	V/II/S/CH

2024.04.09 மு.ப 11.15 – பி.ப 12.15

www.ikeou.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

zoom Online வகுப்புக்கள்

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்



ICT

Maths English

Tamil History

Science



தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் | தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

Contact

76667-4945

01. பெட்டியில் தரப்பட்டுள்ள படத்திற்கு மிகவும் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.



1. 
2. 
3. 

02.முதலில் தரப்பட்டுள்ள படத்தினை உருவாக்குவதற்கு இணைக்கவேண்டிய உருக்களைத் தெரிவுசெய்க.




A


B


C


D

1. AB
2. CD
3. BD

03.கீழே தரப்பட்டுள்ள பிராணிகளை இரண்டு குழுக்களுக்குள் மாத்திரம் உள்ளடங்கக்கூடிய கூற்றைத் தெரிவுசெய்க.



1. பால் குடித்து வளரும்
2. பூச்சி, விலங்குகள் கூட்டத்தைச் சேர்ந்தது.
3. தாவர வகையிலான உணவுகளை உண்ணும்.


04. பிள்ளைகள் 5 பேர் வரிசையாக நிற்கின்றனர்.




மாணவர்களை உயரம் கூடிச்செல்லும் வகையில் ஒழுங்கமைப்பதற்கு குறைந்தளவு எத்தனை மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும்?

1. 1
2. 2
3. 3

05. வினா இலக்கம் 5, 6 ஆகிய வினாக்களுக்கு கோலத்தை இனங்கண்டு விடையைத் தெரிவுசெய்க.




?




1 2 3

06.




?

---

1. 


2. 

3. 

07. மேசை ஒன்றில் கதை புத்தகம், பாடல் புத்தகம், சிறுவர் காட்டூன் புத்தகம் ஆகிய புத்தகங்கள் இருக்கின்றன. குமார் கதை புத்தகம், சிறுவர் காட்டூன் வாசிக்க விரும்புகிறான். மாலா கதை புத்தகத்தினை மாத்திரம் வாசிக்க விரும்புகிறாள். மயுரி மூன்று புத்தகங்களையும் வாசிக்க விரும்புகிறாள். மூவரினதும் விருப்பத்திற்கேற்ப புத்தகங்களைப் பகிர்ந்து கொடுத்தால் குமாருக்கு கிடைக்கும் புத்தகம் என்ன?


1. சிறுவர் காட்டூன் 2. பாடல் புத்தகம் 3. கதைப்புத்தகம்


08. கோலத்தை இனங்கண்டு இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.




?

---

1. 


2. 

3. 


1. 2. 3

www.ikeau.lk


09.




1.



2.




3.



10. தட்டொன்றில் காணப்படும் மாம்பழங்களின் எண்ணிக்கை அப்பிள் பழங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க மூன்று மடங்காகும். அப்பிள் இருக்கும் தட்டிற்கு மேலும் 8 அப்பிள்கள் இட்டபிறகு இரண்டு தட்டுகளிலும் இருக்கின்ற பழங்களின் எண்ணிக்கை சமனாகும். தற்போது இரண்டு தட்டுகளிலும் இருக்கின்ற பழங்களின் எண்ணிக்கை யாது?

1. 24 2. 20 3. 16

11. முதல் இரண்டு தராசுகளினதும் தொடர்பினை அவதானித்து மூன்றாவது தராசில் இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.



1. 50 kg 2. 60 kg 3. 70 kg

12. தட்டொன்றில் ஒரே நேரத்தில் இரண்டு ரொட்டிகளை சுடலாம். ஒரு ரொட்டியை ஒரு பக்கம் சுடுவதற்கு 4 நிமிடங்கள் ஆகின்றன. இந்த தட்டில் 5 ரொட்டிகளை தயாரிப்பதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு?

1. 24 நிமிடம் 2. 32 நிமிடம் 3. 20 நிமிடம்

13. பூ தட்டொன்றில் குறிப்பிட்டளவு செம்மஞ்சள் நிற பூக்கள் இருக்கின்றன. மஞ்சள் நிறப்பூக்கள் நீல நிறப்பூக்களிலும் பார்க்க குறைவாகும். நீல நிறப்பூக்கள் செம்மஞ்சள் நிறப்பூக்களில் அரைவாசியாகும். ரோசா நிறப்பூக்கள் மஞ்சள், நீல நிறப்பூக்களின் கூட்டுத்தொகைக்கு சமனாகும். இதனடிப்படையில் எண்ணிக்கை குறைந்து செல்லும் ஒழுங்கில் அமைவது

1. செம்மஞ்சள், நீலம், ரோசா, மஞ்சள்
2. செம்மஞ்சள், ரோசா, நீலம், மஞ்சள்
3. மஞ்சள், நீலம், ரோசா, செம்மஞ்சள்

- தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

சோலை எங்கும் அதிகாலையில் - வெண்ணிறப் பூக்கள் பூத்துக்குலுங்கி
இளங்காற்றில் அசையும் காட்சியோ - அழகு
வெண்ணிறமாக மின்னி மின்னி - எழுத்தறியச் செல்லும் பாப்பாக்கள்
அசைந்தாடும் மலர்களை விட - அழகானவர்களல்லவா!

14. இக்கவிதை கூறுவது
    1. சோலை எங்கும் மலர்ந்திருக்கும் மலர்கள் பற்றி
    2. சிறு பிள்ளைகளின் அழகு பற்றி
    3. காற்றில் பூக்கள் அசையும் விதம் பற்றி

15. இக்கவிதையில் இடம்பெற்றுள்ள **"எழுத்தறியச் செல்லும்"** என்பதன் கருத்து யாது?
    1. கற்கச் செல்லும் 2. நூலகத்திற்குச் செல்லும் 3. நிரையாகச் செல்லும்

- **கீழே தரப்பட்டுள்ள தகவலை நன்கு அவதானிக்கவும்.**

	1 வது நிரல்	2 வது நிரல்	3 வது நிரல்
1 வது வரிசை			
2 வது வரிசை			
3 வது வரிசை			


படிமுறை 1, 2 ஆகியவற்றின் படி தகவல்கள் மாற்றியமைக்கப்படும். அதனடிப்படையில் 16, 17 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

- படிமுறை 1- முதலாம் வரிசையில் இருக்கும் இடத்திற்கு இரண்டாது வரிசையும் இரண்டாவது வரிசை இருக்கும் இடத்திற்கு முதலாவது வரிசையையும் மாற்றவும்.
- படிமுறை 2- இரண்டாவது நிரலுள்ள இடத்திற்கு மூன்றாவது நிரலையும் மூன்றாவது நிரலுள்ள இடத்திற்கு இரண்டாவது நிரலும் என்றவாறு மாற்றவும்.

16. மாற்றங்களை செய்த பின்னர் படத்தில் நடுவில் இருக்கக்கூடிய படத்தினை தெரிவுசெய்க.
    1.  2.  3. 

17. ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள படத்தினடிப்படையில் மாற்றங்கள் செய்த பின்னர் புத்தகம் இருந்த இடத்தில் இருக்கக்கூடிய படத்தினைத் தெரிவுசெய்க.
    1.  2.  3. 

18. தரப்பட்டுள்ள படத்தில் ஆரம்ப இடத்திலிருந்து பயணத்தை முடிப்பதற்காக செல்லும்போது நிழற்றப்பட்டுள்ள பெட்டிகளைக் கடந்து செல்ல வேண்டும். பயணத்தை முடிப்பதற்காக குறுக்கு வழியாக செல்ல முயற்சிக்கும் போது எத்தனை நிழற்றப்பட்ட பெட்டிகளைக் கடக்க வேண்டும்?



    1. 11 2. 13 3. 15

- **மின்குமிழ் தொடரொன்றில் சிவப்பு, மஞ்சள், நீலம், வெள்ளை என்றவாறு முறையாக 5,10,15,20 ஆகிய செக்கன்களுக்கு ஒரு தடவை ஒளிர்கின்றது.**

19. பிற்பகல் 8.00 மணிக்கு எல்லா மின்குமிழ்களும் ஒளிர்ந்தன. மீண்டும் எல்லா மின்குமிழ்களும் ஒளிரும் நேரத்தைக் குறிக்கும் விடையைத் தெரிவுசெய்க.
    1. பி.ப 9.00 2. பி.ப 8.10 3. பி.ப 8.01

- **அப்பா எனக்கு வெனிலா, சொக்லட் சுவைகளில் டொப்பிகளை சமனான அளவில் கொடுத்தார். தங்கைக்கும் எனக்கும் கிடைத்த அளவில் அரை பங்கு இரண்டு வகையான டொப்பிகளும் கிடைத்தன. எங்கள் இருவருக்கும் கிடைத்த டொப்பிகளின் கூட்டுத்தொகை 24 ஆகும்.**

20. எனக்கு கிடைத்த சொக்கலட் டொப்பிகளின் எண்ணிக்கை எத்தனை?

1. 4 2. 6 3. 8

21. தங்கைக்கு கிடைத்த வெனிலா டொப்பிகளின் எண்ணிக்கை எத்தனை?

1. 4 2. 6 3. 8


22. அருகருகே இருக்கும் 5 இலக்கங்களின் கூட்டுத்தொகை 65 ஆகும். அந்த 5 இலக்கங்களிலும் ஆரம்ப இலக்கம், இறுதி இலக்கங்களின் கூட்டுத்தொகை எவ்வளவு?

1. 25 2. 26 3. 27

23. குமாரிடம் ஒரு பக்க நீளம் 12 cm கொண்ட கம்பியினால் தயாரிக்கப்பட்ட சதுரம் ஒன்று இருந்தது. சதுரத்தின் முழுமையான கம்பியை நீளமாக நீட்டி பாதியாக வெட்டி சமனான நீளங்களைக் கொண்ட முக்கோணம் ஒன்று தயாரிக்கப்பட்டது. முக்கோணத்தின் ஒரு பக்க நீளம் யாது?

1. 6cm 2. 8cm 3. 12cm

24. மிதிவண்டியில் ஒருவர் ஆரம்ப இடத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்து மீண்டும் அதே இடத்திற்கு வந்து சேர்ந்த விதம் படத்தில் காட்டப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.



1. அவர் இடது புறமாக 6 தடவைகளும் வலது புறமாக இரண்டு தடவைகளும் திரும்பி பயணம் செய்துள்ளார்.
2. அவர் இடது புறமாகவும் வலது புறமாகவும் சமமாக திரும்பி பயணம் செய்துள்ளார்.
3. அவர் இடது புறமாக இரண்டு தடவைகளும் வலது புறமாக ஆறு தடவைகளும் திரும்பி பயணம் செய்துள்ளார்.

- **தரப்பட்டுள்ள தகவலை அடிப்படையாகக்கொண்டு 25 ஆம் வினாவிற்கு விடை தருக.**




25. சரியான கூற்றைத் தெரிவுசெய்க.


1. ரூபனின் இடது பக்கம் நீலன் இல்லை.
2. சதனின் வலது பக்கம் மோகன் உள்ளார்.
3 ரூபனின் இடது பக்கம் நீலன் உள்ளார்.


26. பி.ப 7.00 மணிக்கு வைத்திய நிலையத்திற்கு 8 பேர் சமூகமளித்திருந்த வேளையில் ஒவ்வொரு நிமிடத்திற்கு இரண்டு நோயாளிகள் என்று வருகை தருவதுடன் ஐந்து நிமிடத்திற்கு ஒருமுறை 3 நோயாளிகள் மருந்தை பெற்று வெளியேறுகின்றனர். பி.ப 7.20 ஆகும் போது வைத்திய நிலையத்திலிருந்த நோயாளிகளின் எண்ணிக்கை யாது?

1. 16 2. 36 3. 26

27. வீட்டிலிருந்து ஒருவர் முச்சந்திக்கு வரும்போது தனக்கு முன்னால் தெரிந்த விடயங்கள் வரைபடத்தில் தரப்பட்டுள்ளளது.








28. குமாரிடமிருந்த கடிகாரம் கீழே விழுந்து நான்கு துண்டுகளாக உடைந்தன. அதில் 7,8,9 ஒரு துண்டில் காணப்பட்ட இலக்கங்களாகும். ஏனைய இரு துண்டுகளிலும் காணப்பட்ட இலக்கங்களின் கூட்டுத்தொகை 33,11 ஆகும். எஞ்சியுள்ள துண்டின் இலக்கங்கள் யாது?


1. 1 , 2 , 3 , 4 2. 2 , 3 , 4 , 5 3. 3 , 4 , 5 , 6

29. இங்கு காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை?



1. 7
2. 8
3. 9

30. சரியான விடையைத் தெரிவுசெய்க.



1. சதுரங்கள், முக்கோணிகளின் எண்ணிக்கை சமனாகும்.
2. சதுரங்களின் எண்ணிக்கையை விட முக்கோணங்களின் எண்ணிக்கை கூடுதலாகும்.
3. முக்கோணங்களின் எண்ணிக்கையை விட சதுரங்களின் எண்ணிக்கை கூடுதலாகும்.

31. பாக்கு மரமொன்றின் உயரம் 34 அடிகள். பாக்கு மரத்திற்கு 4 அடிகள் ஏறும் பாலா 1 அடி சறுக்கி கீழே வருகிறார். மரத்திற்கு ஏறி நிறைவு செய்ய வேண்டிய பாலா மொத்தமாக குறைந்தது எத்தனை தடவைகள் முயற்சிக்க வேண்டும்?

1. 10 2. 11 3. 12

32. வரிசை ஒன்றில் இடது பக்கமாக இருந்து பார்க்கும் போது பாரதி 9 ஆகவும் வலது பக்கமாக இருந்து பார்க்கும் போது 11 ஆகவும் இருக்கின்றார். பாரதி சரிமத்தியில் இருப்பதற்காக வலது பக்கத்தில் இருந்து இடது பக்கத்திற்கு மாறிக்கொள்ள வேண்டியவர்கள் எத்தனை பேர்?

1. 1 2. 2 3. 3


33. சத்யாவிற்கு இடதுபுறமாக அமலாவும் அமலாவுக்கு இடது புறமாக சகானியும் வாங்கு ஒன்றில் அமர்ந்துள்ளனர். சுகிதா காஞ்சனாவுக்கு இடது புறமாகவும் சத்யாவிற்கு வலது புறமாகவும் இருக்கின்றார். இத்தகவலின் படி சரி மத்தியில் உள்ளவர் யார்?

1. அமலா 2. சத்யா 3. காஞ்சனா


- **A,B,C ஆகிய பெட்டிகளில் சவர்க்கார கட்டிகள் நிரப்பப்பட்டுள்ளன. A பெட்டியைப் போன்று இரண்டு மடங்கு B பெட்டியிலும் A பெட்டியைப் போன்று C பெட்டியில் மூன்று மடங்கும் நிறை உள்ளது.**



A



B



C

34. C பெட்டியில் உள்ள நிறை எவ்வளவு?

1. 5 kg 2. 6 kg 3. 7 kg


35. A, C பெட்டிகளின் நிறைகளின் மொத்த தொகை B பெட்டியில் உள்ள நிறையின்

1. பாதியாகும் 2. இரண்டு மடங்காகும் 3. இரண்டு மடங்கை விட அதிகமாகும்.


36. தீக்குச்சிகளை பயன்படுத்தி முக்கோண உருக்களை உருவாக்குவதில் பிருந்தா கெட்டிக்காரி. அதனடிப்படையில் உரு A, B, C யை தீக்குச்சிகளை பயன்படுத்தி முக்கோண கோலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்படி D யை உருவாக்க c உருவை விட எத்தனை தீக்குச்சிகள் கூடுதலாக தேவைப்படுகின்றன?



A



B



C


..... D

1. 6 2. 9 3. 12

37. அக்கா 16 பூக்கள் பறிக்கும்போது தங்கை 8 பூக்கள் பறிக்கின்றாள். தங்கை 4 பூக்கள் பறிக்கும் போது அண்ணா 12 பூக்கள் பறிக்கின்றார். கூடிய வேகத்திலும் குறைந்த வேகத்திலும் பூ பறிக்கும் இருவர் முறையே

1. அக்கா, அண்ணா 2. அண்ணா, தங்கை 3. அண்ணா, அக்கா

38. அருகிலுள்ள உருவை அவதானியுங்கள். A,B,C,D,E,F,G என கை கோர்த்து ஏழு மாணவர்கள் உள்ளனர். 1,2,3,4 என ஆரம்பித்து, நான்காவது உள்ளவர் நீக்கப்படுகிறார். இவ்வாறு பல தடவை எண்ணும் போது நான்காவது இலக்கத்திற்கு உரியவர் நீக்கப்பட்டு மிகுதியாக எஞ்சும் ஆங்கில எழுத்து யாது?



1. A 2. B 3. C

39. மாலாவிடம் 7 மாம்பழங்களும் மாலதியிடம் 9 மாம்பழங்களும் மதுமிதாவிடம் 5 மாம்பழங்களும் இருந்தன. அனைத்து மாம்பழங்களையும் மூவரும் சமமாக பிரித்துக் கொண்டனர். இவ்வாறு சமமாக பிரித்த பின்னர் இலாபம், நட்டம் அடைந்த இருவரும் முறையே

1. மாலா, மாலதி 2. மாலதி, மதுமிதா 3. மதுமிதா, மாலதி

40. கரீம் ,ரவி ஆகிய இருவரின் வயதுகளின் கூட்டுத்தொகை 54 ஆகும். ரவியை விட கரீம் 8 மடங்கு அதிகமாக இருந்த போதும் ரவியின் வயது எத்தனை?

1. 6 2. 3 3. 4

www.ikeda.lk



சபரகமுவ மாகாண ஆரம்பக்கல்விப் பிரிவு

சிசு சவிய 2024

தரம் - 5



மாணவர்களை பாடசாலைகளுக்கு தேர்ந்தெடுப்பதற்காகவும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சைக்காக மாணவர்களைத் தயார்படுத்தவதற்காக நடாத்தப்படும் முன்னோடிப் பரீட்சை

மதிப்பீட்டுப் பரீட்சை இலக்கம் - 2
வினாத்தாள் - 11

01 மணி 15 நிமிடங்கள்

இந்த வினாத்தாள் பரீட்சையல்ல என்பதோடு மாணவர்களின் அடைவு மட்டத்தினை அளவிடுவதற்காக மாத்திரம்

சுட்டெண் : - .....

பரீட்சார்த்திகளுக்கான ஆலோசனைகள்

- பரீட்சை சுட்டெண்ணை குறித்த இடத்தில் எழுதவும்.
- மூன்றாவது பக்கத்திலும் குறித்த இடத்தில் பரீட்சை சுட்டெண்ணை எழுதவும்.
- வினாத்தாளில் 60 வினாக்கள் இருக்கின்றன. சில வினாக்களில் உப வினாக்களும் காணப்படுகின்றன.
- எல்லா வினாக்களுக்கும் வினாத்தாளிலேயே விடையளிக்கவும்.
- செய்கை வேலைக்காக தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களின் பாவனைக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்றப் புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தப் புள்ளி இலக்கத்தில்	
மொத்தப் புள்ளி எழுத்தில்	

	கையெழுத்து, குறியீட்டு இலக்கம்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/II/S
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்தகின்றேன்.	
	V/II/S
மதிப்பீட்டுப் புள்ளியை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு செய்து வழங்கிய புள்ளிகள், இறுதிப்புள்ளிகள் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/II/S/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்யப்பட்டது. இறுதிப்புள்ளி சரியானது.	
	V/II/S/CH

2024.04.09 மு.ப 09.30 – மு.ப 10.45

www.ikeduk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

01. கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

வண்ணத்துப்பூச்சிகளின் பிரதான உணவு அமுதம் ஆகும். பெரும்பாலும் அவை திரவ உணவையே உண்ணும். அவை கண்களைத் திறந்தபடியே இரவில் ஓய்வெடுக்கின்றன. இவற்றின் இறக்கைகளில் அமைந்துள்ள நரம்பு மண்டலம் இறக்கைகளுக்கு சக்தியை கொடுக்கின்றது. உலகின் பல பகுதிகளிலும் பல வண்ண வண்ணத்துப்பூச்சிகள் காணப்படுகின்றன.

1. வண்ணத்துப்பூச்சியின் **பிரதான** உணவாக குறிப்பிடப்படுவது யாது?

   .....

2. பந்தியிலுள்ள **பெயர்ச்சொற்கள்** இரண்டைக் குறிப்பிடுக.

   .....

3. ''இரவில் ஓய்வெடுக்கின்றன'' என்ற வாக்கியத்தை **இறந்தகால** வாக்கியமாக எழுதுக.

   .....

4. **அவை** என்ற சொல்லிலுள்ள உயிர்க்குறியின் பெயரை எழுதுக.

   .....

5. அ.ஃறிணை, படர்க்கை, பெயர்ச்சொல் ஒன்றினைக் குறிப்பிடுக.

   .....

6. வண்ணத்துப்பூச்சிகளின் இறக்கைகளுக்கு சக்தியைக் கொடுப்பது எது?

   .....

02. உயர்திணை, பன்மை, இறந்தகால வினைச்சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. செய்தன 2. செய்தார் 3. செய்தார்கள்

03. மாறிகிடக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக மீண்டும் எழுதுக.

அருகே / வந்தன / இரண்டு / மான்கள் / ஒரு / குளத்திற்கு

.....

04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சரியாயின் **(சரி)** எனவும் பிழையாயின் **(பிழை)** எனவும் எழுதுக.

1. அண்ணா பாட்டுப் பாடுகின்றார். (……..)
2. தம்பி மைதானத்தில் பட்டம் விடுகிறார்கள். (……..)
3. மாலதி இனிமையாக பாட்டுப் பாடுவான். (……..)
4. நாங்கள் கடலோரத்தில் மணல் வீடு கட்டி விளையாடுவோமா? (……..)
5. பத்து ஆண்டுகள் ஒரு நூற்றாண்டு எனப்படுகிறது. (……..)

05. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

நாம் அருகில் வந்துவிட்டோம் எனக்கூறிய மான்குட்டி சிங்கத்தை ஒரு குழிக்கு அருகில் கூட்டிச்சென்றது

www.ikedu.lk

06. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புக.

1. வைத்தியசாலைக்குள் .....பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.
2. சூடுகண்ட பூனை .....நாடாது.
3. தெருக்கள் கூடுமிடம்..... என அழைக்கப்படும்.

07. எழுத்துப் பிழையில்லாத சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. காச்சல்	காய்ச்சல்	காய்ச்சள்
2. பல்கலைக்கழகம்	பள்களைக்கழகம்	பல்கழைக்கழகம்
3. ஆசிரமம்	ஆச்சிரமம்	ஆச்சிறமம்

08. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

சிறுவன் மைதானத்தில் விளையாடினான்.

.....

09. சேர்த்தெழுதுக.

1. மா + காய் = ... 2. பூ + சோலை = ...

10. ஆங்கில சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லை எழுதுக.

1. Rainbow: ..... 2. Hospital: .....

11. உருக்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.



.....



.....

12. மாறிகிடக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக மீண்டும் எழுதுக.

1. my / younger / This / sister /is

.....

2. helping / am / my / I / mother

.....

13. தபல் கார்யாலய என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ் சொல்லை தமிழில் எழுதுக.

.....

14.பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

கை கழுவுங்கள் : .....

- **எல்லா வினாக்களுக்கும் புள்ளிக்கோட்டின் மீது விடை எழுதுக.**

15. 1) 79000 என்ற எண்ணுக்கு ஒன்று குறைந்த இலக்கத்தின் எண்பெயரை எழுதுக.

.....

2) முப்பத்தையாயிரத்து ஒன்பது என்ற எண்ணை இலக்கத்தில் எழுதுக.

.....

www.ikeou.lk

16. 6 7 8 4

1) வட்டமிடப்பட்டுள்ள இலக்கத்தின் இடப்பெறுமானம் யாது? .....

2) 6784 என்ற எண்ணை விரித்தெழுதுக. ..... + ... + ... + ...

17. கீழே தரப்பட்டுள்ள எண்களை இறங்குவரிசைப்படி எழுதுக.


97438, 97593, 97452

.....

18. தருன், மாஹிர், விகாஷ் ஆகியோர் சேர்ந்து சேகரித்த முத்திரைகளின் எண்ணிக்கை முறையே 384, 592,1241 ஆகும். ஆகவே மூவரும் சேர்ந்து சேகரித்த முத்திரைகளின் எண்ணிக்கை எவ்வளவு? .....

19. 50kg நிறையுடைய சீனி பொதியிலிருந்து 27kg 500g சீனி விற்கப்பட்டது எனின், எஞ்சிய சீனியின் நிறை எவ்வளவு? .....

20.



1.படத்திலுள்ள மொத்த பழங்களின் எண்ணிக்கையை உரோமன் இலக்கத்தில் எழுதுக.....


2.தோடம்பழத்தை விட அதிகமாக காணப்படும் மங்குஸ் பழங்களின் எண்ணிக்கையை உரோமன் இலக்கத்தில் எழுதுக. .....

21. 706 மாங்காய்களை நான்கு பங்குகளாக பிரிக்கும்போது


1. ஒரு பங்கில் காணப்படும் மாங்காய்களின் எண்ணிக்கை யாது? .....

2. பிரித்த பிறகு எஞ்சிய மாங்காய்களின் எண்ணிக்கை யாது? .....

22. கீழே தரப்பட்டுள்ள திண்மங்களின் பெயர்களை எழுதுக.



.....



.....

23. கீழே தரப்பட்டுள்ள படத்திற்கு சமச்சீர் கோடுகள் வரைக.




24. எண்கோலத்தில் அடுத்துவரும் இலக்கத்தினை எழுதுக.

1) 163, 171, 179, ...

2) 133,140, ..., 154

25. கீழே தரப்பட்டுள்ள வடிவங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய திண்மங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.



1. .....

2. .....

www.ikeou.lk

26. கீழே தரப்பட்டுள்ள விலைப்பட்டியலைப் பூரணப்படுத்துக.

பொருட்கள்	பெற்றுக்கொண்ட அளவு	1kg விலை ரூபா	சதம்	பெறுமதி ரூபா	சதம்
கரட்	.....	840	00	420	00
பீட்றூட்	200g	400	00	.....	
கோவா	250g	600	00	.....	
மொத்த பணம்				.....	

2. பொருட்களை வாங்குவதற்காக ரூபாய் 1000 வழங்கினால் மீதியாக கிடைக்கும் பணம் எவ்வளவு? .....

27. வீட்டிலிருந்து பாதைக்கு உள்ள தூரம் 15m ஆகும். பாதையிலிருந்து வீட்டிற்கு நீரைப் பெற்றுக் கொள்வதற்காக 4m 45cm, 5m 78cm ஆகிய இரண்டு குழாய்த்துண்டுகள் இணைக்கப்பட்டுள்ளன.


1.இரண்டு குழாய்த்துண்டுகளினதும் மொத்த நீளம் எவ்வளவு? .....

2.பாதையிலிருந்து நீரைப் பெற்றுக்கொள்வதற்காக மேலதிகமாக தேவைப்படும் குழாயின் நீளம் எவ்வளவு?.....

28.போத்தலொன்றில் 800ml குளிர்பானம் காணப்படுகின்றது. அவ்வாறான இரண்டு போத்தல் களுக்கு 3l 850ml நீர் சேர்த்து பானம் தயாரிக்கப்பட்டது. தயாரிக்கப்பட்ட பானத்தின்

மொத்த அளவை ml இல் எழுதுக. .....

29. கீழே தரப்பட்டுள்ள படத்தில் ¼ நிறந்தீட்டுக.



30 தொடக்கம் 59 வரையிலான வினாக்களில் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க்கோடிடுக.

30. குறிப்பிட்ட நேரத்திற்குள் வேலைகளை செய்து முடிக்காத சந்தர்ப்பங்களில் ஏற்படும் விளைவு
1. நேரம் மீதமாகும்
2. வேலைகள் கைவிடப்படும் நிலைமை ஏற்படும்
3. வேலைகள் சிறப்பாக நிறைவுபெறும்

31. பாடசாலையில் காணப்படும் சட்டதிட்டங்களில் ஒன்று
1. காலை 7.30 க்கு பாடசாலை ஆரம்பித்தல்
2. மாணவர்களுக்கு விளையாட வாய்ப்பு வழங்குதல்
3. கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்

32. நீரை குறைவாக பருகுவதால் ஏற்படுவது
1. நாக்கு, வாய் வறண்டு போதல்
2. சிறுநீர் கழிக்க இலகுவாதல்
3. சருமம் ஈரழிப்பு தன்மையாக இருத்தல்

www.ikeou.lk

33. விழுமியப் பண்புகளில் ஒன்று
1. உணவு உண்ண முன்னர் கைகளைக் கழுவுதல்
2. முதியோருடன் ஒன்றுக்கொன்று எதிர்த்து பேசுதல்
3. முதியோரைக் கண்டவுடன் எழுந்து நிற்றல்

34. ஆங்கிலேயர் இலங்கையை முழுமையாகக் கைப்பற்றிய ஆண்டு
1. 1948 2. 1815 3. 1942

35. நீர்ச்சுழலியின் வேகத்தை அதிகரிப்பதற்கு செய்யவேண்டியது
1. சுழலியிலுள்ள கரண்டிகளைக் குறைத்தல்
2. சுழலிக்கு வரும் நீரின் அளவைக் குறைத்தல்
3. சுழலியிலுள்ள கரண்டிகளின் அளவைக் கூட்டுதல்

36.பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் கொண்டாடும் பண்டிகைகள் முறையே
1. பொசொன், தைப்பொங்கல், ரமழான், நத்தார்
2. வெசாக், தைப்பொங்கல், நத்தார், ரமழான்
3. பொசொன், நத்தார், ரமழான், தைப்பொங்கல்

37.திடீர் விபத்துகளின் போது அவசர உதவி வண்டியை (Ambulance) அழைப்பதற்காக தற்போது பாவனையிலுள்ள தொலைபேசி இலக்கம்
1. 1990 2. 119 3.1980

38. செக்கு பயன்படுத்தப்படுவது
1. எண்ணெய் எடுப்பதற்கு 2. பாரம் இழுப்பதற்கு 3.கருங்கல் உடைப்பதற்கு

39. பலகை ஒன்றில் துளையிடுவதற்காக பயன்படுத்தப்படும் உபகரணம்
1. குறடு 2. துறப்பணம் 3. வாள்

40. இலங்யின் அரச இலச்சினையை நிர்மாணித்தவர்
1. J.B சேனாநாயக்க 2. S.M செனெவிரத்ன 3. ஆனந்த சமரகோன்

41. பானம் தயாரிப்பதற்காக பயன்படுத்தக்கூடியவை
1. விரலிக்காய், நெல்லி, வெள்ளரிக்காய்
2. பீர்க்கங்காய், இரமுசு, சாத்தாவரி
3. தோடை, வல்லாரை, வில்வம் பூ

42. தேசியக்கொடி, அரச இலச்சினை தயாரிக்கும் குழுவில் செயற்பாட்டாளராக இருந்தவர்
1. T.B.ஜாயா 2. C.W.W கன்னங்கரா 3. ஆனந்த குமாரசுவாமி

43. பற்சில்லு காணப்படும் உபகரணம்
1. துறப்பணம் 2. மூடி திறப்பான் 3. குறடு

44. திருகோணமலை, அம்பாந்தோட்டை ஆகிய கடல்களில் சங்கமிக்கும் ஆறுகள் முறையே
1. களனி ஆறு, வளவை ஆறு
2. களுகங்கை, மகாவலி கங்கை,
3. மகாவலி கங்கை, வளவை கங்கை

www.ikeou.lk

45. இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது அதிவேகப் பாதை

1. கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக பாதை
2. கொழும்பு – கடவத்த அதிவேக பாதை
3. தெற்கு - அதிவேக பாதை


46.கலப்படம் செய்து வர்த்தகப் பொருட்களை விற்பனை செய்வோருக்கு எதிராக புகார் செய்ய வேண்டிய இடம்

1. நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை
2. பொலிஸ் நிலையம்
3. பிரதேச செயலகம்

47.மரச்செதுக்கல், முகமூடி தயாரிப்பில் பிரசித்திபெற்ற இடங்கள் முறையே

1. எம்பக்கே, அம்பலாந்தோட்டை
2. எம்பக்கே, அம்பலாங்கொடை
3. கடுகண்ணாவை, அம்பலாங்கொடை

48.வீட்டுத்தோட்டத்திற்கு வரும் பிராணிகளை விரட்டுவதற்காக பயன்படுத்தப்படும் கருவி. இந்த படத்தின் பெயர்



1. காற்றுக்கிலுக்கி 2.வெருளி 3. நீர்ப்பிசாசு

49.கப்பி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம்

1. வாகனத்திற்கு பொருளொன்றை ஏற்றுவதற்கு
2. கல்லொன்றை தள்ளுவதற்கு
3. கிணற்றிலிருந்து நீரைப் பெற்றுக்கொள்வதற்கு

50.மின்குமிழ் ஒளிராத சந்தர்ப்பமாக அமைவது



A



B



C

1. A 2. B 3. C

51.அனைத்தும் உண்ணி கூட்டத்தில் மாத்திரம் அடங்குவது

1. கோழி, நாய், மான்
2. நாய், பூனை, கோழி
3. பூனை, முயல், மான்

52.மரம், செடி, கொடிகளால் பிராணிகளுக்கு கிடைக்கும் நன்மைகள் அதேபோன்று பிராணிகளால் மரம், செடி, கொடிகளுக்கு கிடைக்கும் நன்மைகள் முறையே

1. உணவைப் பெற்றுக்கொள்ளல், மகரந்த சேர்க்கைக்கு உதவுதல்
2. பசளைப் பெற்றுக்கொள்ளல், நிழல் பெற்றுக்கொள்ளல்
3. வித்து பரம்பலடைதல், உணவு பெற்றுக்கொள்ளல்

www.ikedu.lk

53. தரப்பட்டுள்ள படத்தில் 1, 2 ஆகிய இலக்கங்கள் காட்டும் மாகாணங்கள் முறையே

1. வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம்
2. மத்திய மாகாணம், வடமேல் மாகாணம்
3. வட மத்திய மாகாணம், மத்திய மாகாணம்



54. யோகட், தயிர் ஆகிய உணவுப்பொருட்களை வாங்கும்போது அவதானிக்க வேண்டிய விடயம்

1. தரச்சான்றிதழ், உற்பத்தித் திகதி
2. உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி
3. காலாவதியாகும் திகதி , தரச்சான்றிதழ்

55. வீட்டுத்தோட்ட வேலைகளின் போது மாத்திரம் பயன்படும் உபகரணங்கள் முறையே

1. மண்வெட்டி, முள்ளு, குப்பைவாரி
2. அலவாங்கு, தூக்குக்குண்டு, மண்வெட்டி
3. குப்பைவாரி, தும்புத்தடி, மண்வெட்டி

56. அசுத்தமான நீரைப் பருகுவதனால் ஏற்படக்கூடிய நோய்கள்

1. தடிமன், டெங்கு, காய்ச்சல்
2. வயிற்றோட்டம், செங்கண்மாரி, மஞ்சள் காய்ச்சல்
3. டெங்கு, சுவாச நோய், யானைக்கால்

57. ஒளிசமிக்ஞை விளக்கில் சிவப்பு நிறம் ஒளிர்வதால் குறிப்பது

1. செல்லவும் 2. ஆயத்தமாகவும் 3. நிறுத்தவும்

58. கொம்போஸ்ட் உரம் தயாரிக்கும் தொட்டிக்குள் போடக்கூடியவை

1. செமன் டின், பழைய பற்தூரிகை
2. தென்னமட்டை, பொலித்தின் பைகள்
3. தென்னமட்டை, இலை குழைகள்

59. ஒருவர் மயக்கமடைந்ததும் உடனடியாகச் செய்யவேண்டியது

1. உடலை நன்கு போர்த்துதல்
2. குளிர் நீர் பருகக் கொடுத்தல்
3. நன்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்தல்.

60. வறட்சியின் பின்னர் மழை பெய்யத் தொடங்கியது. அதன் பின்னர் இடம் பெற்ற நிகழ்வுகளை அடிப்படையாகக்கொண்டு கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாது இருக்கவேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.

1. ……..
   ……..

2. ……..
   ……..

3. ……..
   ……..

www.ikedu.lk

வினாத்தாள் - 11 புள்ளி வழங்கும் திட்டம்

வினா இலக்கம்	விடைகள்	புள்ளிகள்
1	அழுதம்	01
2	வண்ணத்துப்பூச்சி, கண்கள்	01
3	இரவில் ஓய்வெடுத்தன.	01
4	சங்கிலிக்கொம்பு	01
5	வண்ணத்துப்பூச்சி	01
6	நரம்புமண்டலம்	01
2	செய்தார்கள்	01
3	ஒரு குளத்திற்கு அருகே இரண்டு மான்கள் வந்தன.	02
4	1) சரி 2) பிழை 3) பிழை 4) சரி 5) பிழை	05
5	"நாம் அருகில் வந்துவிட்டோம்" எனக்கூறிய மான்குட்டி சிங்கத்தை ஒரு குழிக்கு அருகில் கூட்டிச்சென்றது.	01
6	1) தொலைபேசி 2) அடுப்பங்கரையை 3) சந்தி	03
7	1) காய்ச்சல் 2) பல்கலைக்கழகம் 3) ஆச்சிரமம்	03
8	சிறுவர்கள் மைதானத்தில் விளையாடினார்கள்.	01
9	1) மாங்காய் 2) பூஞ்சோலை	02
10	1) வானவில் 2) வைத்தியசாலை	02
11	1) Fruits 2) Ice cream	02
12	1) This is my younger sister 2) I am helping my mother	02
13	தபால் காரியாலயம்	01
14	அத சோதன்ன	01
15	1) எழுபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்பது 2) 35009	02
16	1) 6000 2) 6000 + 700 + 80 + 4	02
17	97 593, 97 452, 97 438	02
18	2217	02
19	22kg 500g	02
20	1) X, 2) IV	02
21	1) 176 2) 2	02
22	1) உருளை 2) சதுரமுகி	02
23		02
24	1) 187 2) 147	02
25	1) நான்முகி 2) உருளை	02
26	1) 500g, 2) 80.00 3) 150.00 4) 650.00 2) 350.00	02
27	1) 10m 15cm 2) 4m 85cm	02
28	5450 ml	02
29		02

மாதத்தின் முதல் வாரம் தரம் 06 தொடக்கம் 11 வரையான
தமிழ் மீடியம் வகுப்புக்கள் இலவசம்
விரும்பியவர்கள் பங்குபற்றலாம்

இதோ உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

Learn Easy கல்வி நிலையத்தில் நிகழ்நிலையாக

zoom Online class

76667-4945

அனைத்து வகுப்புகளுக்குமான அனுமதிக்கட்டணம் இலவசம்

Mobile	076667-4945
WhatsApp	+94 76667-4945
Viber	+94 76667-4945
Email	learneasy.lk@gmail.com
Web	www.learneasy.lk

Face book - https://www.facebook.com/learneasylk

வகுப்புக்கள் தொடர்பான மேலதிக தகவல்களை
மேலுள்ள இலக்கத்திற்கு
WhatsApp செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

வினா இலக்கம்	விடை இலக்கம்	வினா இலக்கம்	விடை இலக்கம்
30	2	45	3
31	1	46	1
32	1	47	2
33	3	48	1
34	2	49	3
35	3	50	3
36	2	51	2
37	1	52	1
38	1	53	3
39	2	54	2
40	2	55	1
41	1	56	2
42	1	57	3
43	1	58	3
44	3	59	3

வினா இலக்கம் - 60

- ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாது இருக்கவேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும். ஒரு வாக்கியத்தில் ஒரு எழுத்துப்பிழை இருப்பின் 1 புள்ளி வழங்கவும். இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பிழைகள் இருப்பின் புள்ளிகள் வழங்க வேண்டாம்.

- முழு வினாப்பத்திரத்தினையும் கவனத்தில்கொண்டு எழுத்து, இலக்கங்கள் நேர்த்தியாக இருப்பின் 2 புள்ளிகள் வழங்கவும்.

• சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்		1 × 30 =	30 புள்ளிகள்
• வினாத்தாள்	1	2.5 × 40 =	100 புள்ளிகள்
• வினாத்தாள்	11	1 - 60	100 புள்ளிகள்
• மொத்தப் புள்ளிகள்			200 புள்ளிகள்

www.ikeou.lk